**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.</u>**
**<u>O.S.No. 1253/2022</u>**

**வா.சா.1. ராஜன்** 11.07.2023.

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

பிரதிவாதி எனக்கு சின்னவயது முதல் பழக்கம். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு தான் எனக்கும் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. இந்த பணம் நான் பிரதிவாதி தோட்டம் வாங்குவதற்காக வாங்கிக்கொடுத்தது. இந்த கடனை வாங்கிக்கொடுத்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் ஒன்றரை வருடங்கள் இருக்கும். இந்த பணத்தை நான் எனது வீட்டில் வைத்து தான் எடுத்து கடன் கொடுத்தேன். ஒரு வாரத்திற்கு முன்பு தோட்டம் வாங்குவதற்கு பணம் தேவை என்று கேட்டதால் எனக்கு தெரிந்தவர்களிடம் இருந்து வாங்கி எனது வீட்டில் வைத்திருந்து பணத்தை எடுத்து கொடுத்தேன். ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு பிரதிவாதி எந்த தோட்டமும் வாங்கவில்லை என்றும், அவர் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை இந்த வழக்கிற்காக தற்போது நான் ஜோடித்து அவர் தோட்டம் வாங்குவதற்காக என்னிடம் கடன் கேட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. தாவா புரோநோட்டில் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் தவறு ரேகையும் செய்துள்ளார் கையெழுத்தும் செய்துள்ளார். தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் ரேகை அவருடையது அல்ல என்றும், அதை உற்பத்தி செய்து மோசடியாக போட்டு இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கையெழுத்து மற்றும் ரேகை அவருடையது தான் என நிருபணம் செய்வதற்கு கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணரின் ஆய்விற்கு அனுப்ப நான் தயாராக உள்ளேனா என்றால் தேவையென்றால் அனுப்பி வைக்க தயாராக உள்ளேன். இதற்கு முன்பு குறுக்கு விசாரணையில் முதல் நாள் பணத்தை பெற்றுச்சென்று விட்டு மறுநாள் எனது பெயருக்கு புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விபரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, நான் தாக்கல் செய்துள்ள பிராதிலோ, அல்லது பிரமாணபத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ள நான் எனது வழக்கறிஞரை அனுகி பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். நான் தாவாவில்

பிராதில் கொண்டுள்ள விபரங்களும், பிரமாணபத்திரிக்கையும் நான் சொல்லி தான் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான் அதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் தாவா புரோநோட்டிற்கும் இந்த பிரதிவாதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், தாவாபிராமிசரி நோட்டை பிரதிவாதி எனக்கு எந்த காலத்திலும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்று சொன்னால் தவறு. நான் பல நபர்களிடம் கடன் வாங்கியதற்கே பிரதிவாதி ஜாமின் கையெழுத்து போட்டுள்ளார் என்றும், எனவே அவர் கடன் வாங்குவதற்கு அவசியமில்லை என்றால் தவறு. தாவாவில் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றும், இந்த தாவாவை பிரதிவாதியின் அதிகப்படியான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.07.11 17:49:33 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்